பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 10 புதன்கிழமை 26.11.2025 கதிர் 018

### இது ரகசியம் அல்ல!

நுகேகொடையில் எதிர்க் கட்சிகள் சில இணைந்து நடத்திய பேரணி மக்களுக்கு நன்மையளித்ததோ இல்லையோ நாமலின் தலைமைக்கும் அவரது பொது ஜன ☞ 2

சிலாவத்துறையில்

## கடலையும் உரிமை கோரும் வனஉயிரிகள் திணைக்களம்

மன்னார் சிலாவத்துறை கடற்பரப்பையும் வனஉயிரிகள் திணைக்களம் கடல்சார் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திற்கென கோரியிருக்கின்றது. இவ்வாறான அபகரிப்புக்களுக்குத் துணையாகச் சுற்றாடல் துறை அமைச்சு செயற்படக்கூடாது. வடக்கு மற்றும் கிழக்குப் மாகாணங்களில் இவ்வாறாக இந்தத் திணைக்களங்களினூடாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை இந்த ஆளும்தரப்பு விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை ☞ 6

## கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் படிப்படியாக அதிகரிக்கப்படும்

பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவிப்பு

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்கு 6 சதவீத மானியம் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டோம். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது. கல்வித்துறைக்கான ஒதுக்கீடு கட்டம் கட்டமாக அதிகரிக்கப்படும் என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 6

## அமைச்சரின் பதில்

போர் இடம்பெற்ற பகுதிகளில் காணிப் பிரச்சினைகள் உள்ளன. அது இன்னும் தீர்க்கப்படவில்லை. போரின் பின்னர் குறித்த பிரதேசங்களில் வனப் பாதுகாப்பு மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமது பிரதேச எல்லைகளை அடையாளமிடும்போது அந்தப் பகுதிகளுக்குச் சென்று அதனைச் செய்ய முடியாமையினால் ஜீ.பி.எஸ். மூலமே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது சில குறைபாடுகள் காணப்பட்டிருக்கலாம். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ☞ 2

## ஏற்றுமதி வருமானம் நாட்டில் அதிகரிப்பு

நாட்டில் தற்போது ஏற்றுமதி வருமானத்தில் நேர்மறையான அதிகரிப்பினை அவதானிக்க முடிகிறது. ஏற்றுமதி வருமானம் மாதமொன்றுக்கு சராசரியாக 1400 மில்லியன் டொலரைவிட அதிகமாகப் பதிவாகியுள்ளது. இவ்வாண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள 18 பில்லியன் டொலர் இலக்கில் 80 சதவீதத்தை அண்மித்துள்ளதாக ☞ 6

# அரசியல் தீர்வினால் மட்டுமே தமிழ் மக்களின் வடு ஆறும்

நாடாளுமன்றத்தில் சாணக்கியன் தெரிவிப்பு

**ஆளும்தரப்பின் கடந்த ஓரிரு வார செயற்பாடுகள் தமிழ் மக்களின் மனங்களை புண்படுத்தியுள்ளது. அரசியல் தீர்வுகள் ஊடாகவே இந்த வடுக்கள் ஆறும். வரலாற்றுப் பாடத்தில் தமிழர்களின் உண்மையான வரலாற்றை உள்ளடக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத் தலைமுறையினர் உண்மையை அறிவார்கள். சமத்துவமாக வாழ்வார்கள் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பிரதமரிடம் வலியுறுத்தினார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**கல்வி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் பேசும் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்** ☞ 2

புதிய கல்விச் சீர்திருத்தத்தால்

## வரவுள்ள சவால்களை எதிர்கொள்ள கல்வித்துறையை தயாராக்கவேண்டும்

பிரதமர் ஹரினி அழைப்பு

கல்வித்துறையில் பல சவால்கள் காணப்படுகிறது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். சிறந்த மாற்றத்துக்குள் பிரவேசிக்கும்போது சவால்கள் தோற்றம் பெறும். புதிய கல்வி மறுசீரமைப்பை 2026ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தும்போது தொழில்நுட்பரீதியில் சவால்கள் தோற்றம் பெறும். அவற்றை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கு கல்வித்துறையைத் தயார்ப்படுத்தவேண்டும் எனப் பிரதமரும், கல்வி மற்றும் உயர்கல்வி, தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறந்த கல்வி முறைமையை உருவாக்க வேண்டுமாயின் கல்வி மறுசீரமைப்புக்கள் உறுதியான கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக அமையவேண்டும். உருவாக்கப்படும் கொள்கையை சிறந்த முறையில் அமுல்படுத்துவதற்கு வலுவான நிறுவனக் கட்டமைப்பு அவசியமானதாகும். கல்வி மறுசீரமைப்புக்கும், அதனை அமுல்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை உருவாக்கவும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்புக்களை ☞ 2

## தலைவர் பிரபாவின் பிறந்த நாள் இன்று

பொலிஸ் கெடுபிடிகள் அதிகரிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71ஆவது பிறந்தநாள் இன்றாகும். நாளை வியாழக்கிழமை மாவீரர் நாள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகப் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வல்வெட்டித்துறை பகுதியில் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர். அத்தோடு பதாகைகள் சிலவற்றை நீக்கும்படியும் உத்தரவிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலரின் சிவில் உடை படங்களுடன் வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட பதாகையை அகற்ற சொன்ன வல்வெட்டித்துறை பொலிஸார், குறித்த பதாகையில் உள்ள பாதணி விடுதலைப் புலிகளினை ☞ 2

## புதிய சட்டம் வந்தால் மட்டுமே மாகாண சபைத் தேர்தல் நடக்கும்

அமைச்சரவைப் பேச்சாளர் திட்டவட்டம்

மாகாணசபைத் தேர்தலை துரிதமாக நடத்த வேண்டும் என்பதே ஆளும்தரப்பினதும் நோக்கமாகும். எவ்வாறிருப்பினும் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அப்பால் சென்று அதனை நடத்த முடியாது. நாடாளுமன்றத்தால் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே தேர்தலை நடத்த முடியும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

வடக்கு, கிழக்கில் நிலவி வரும்

## ஆசிரியர் பற்றாக்குறைக்கு உடனடித் தீர்வு வேண்டும்

ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்த பாடசாலை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இருந்த 56 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு உடன் தீர்வுகாண வேண்டும் என இலங்கைத் தமிழ் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பெரமுனவுக்கும்பெரும்நன்மையளித்துள்ளது என்று நிச்சயம் சொல்லலாம்.

நாமலின் சித்தப்பாவான கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த 'அரகலய' மக்கள் எழுச்சியுடன் பொது ஜன பெரமுனவின் கவர்ச்சி சிங்கள மக்களிடம் சரிந்தது. கிட்டத்தட்ட அது அதளபாதாளத்திற்குள் வீழ்ந்தது என்று சொல்லலாம். கோட்டாபயவை அரசுத் தலைவர் தேர்தலில் 69 சதவீதம் பேர் ஆதரித்திருக்க, 2024 அரசுத் தலைவர் தேர்தலில் நாமல் ராஜபக்சவை வெறும் 3 சதவீதம் பேர் மட்டுமே ஆதரித்தனர் என்ற நிலைக்குப் படுவீழ்ச்சியைச் சந்தித்தது. பொதுஜன பெரமுன.

இதையடுத்து அந்தக் கட்சியிலிருந்தவர்கள் பலரும் வேறு கட்சிகளில் சென்று சேர்ந்துகொண்டனர். அவர்களில் பலரையும் ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் ஒதுக்கித் தள்ள அவர்கள் வேறு வழியின்றி ரணில் விக்கிரமசிங்கவுடன் சென்று சேரவேண்டியவர்களானார்கள். அப்போதும்கூட அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வதற்குத் தயாராக இருக்கவில்லை. ரணிலுடன் சேர்வதற்கு வழியற்றவர்கள் அல்லது அதற்கு விரும்பாதவர்கள் அரசியலைவிட்டே ஒதுங்கினார்கள்.

பொதுஜன பெரமுனவினரும் ரணிலும் சேர்ந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கு தலைகீழாக முயன்றனர். ஆனால் பெரமுனவில் இருந்தவர்கள் ஒட்டுமொத்தமாக ரணிலை நம்புவதற்குத் தயாராக இல்லாத காரணத்தால் அந்த முயற்சி பெரியளவில் வெற்றிபெறவில்லை. அதனால் புதிய ஜனநாயக முன்னணி (டீஎன்ஏ) என்ற கூட்டணியில் சின்னத்தை 'சிலிண்டர்' ஆக மாற்றிவிட்டு அதில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டனர்.

இந்தப் புதிய ஜனநாயக முன்னணி ஒன்றும் இப்போது ரணிலால் தொடங்கப்பட்டதல்ல. அது அத்துலத்முதலியின் விதவை மனைவியான சிறிமானியால் 1995இல் உருவாக்கப்பட்டது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து பிரிந்து சென்று இந்தப் புதிய ஜனநாயக முன்னணி உருவாக்கப்பட்டிருந்தது. தொடக்கத்தில் இந்தக் கட்சியின் பெயர் ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணி என்றே இருந்தது. 2009இல்தான் அதன் பெயரை மாற்றினார்கள்.

2010, 2015, 2019, ஆகிய ஆண்டுகளில் நடந்த அரசுத் தலைவர் தேர்தல்களில் எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் கூட்டணிக்கும் ஆதரவாகச் செயற்பட்டு வந்தது மட்டும்தான் அந்தக் கட்சி செய்து வந்த அரசியல் பணி. கோட்டாபயவின் எஞ்சிய ஆட்சிக் காலத்தை நிறைவு செய்த ரணில் விக்கிரமசிங்க 2024 அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட பெரமுன கட்சியோடு சேர்ந்து ஒரு கூட்டணியை ஏற்படுத்த முயற்சித்துத் தோல்வியடைந்த நிலையில் சுயேச்சை வேட்பாளராக 'சிலிண்டர்' சின்னத்தில் நின்றார். அதன் பின்னர் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் அந்தச் சின்னத்தை புதிய ஜனநாயக முன்னணியின் சின்னமாக மாற்றிக் கொண்டு ரணிலும் அவரோடு சேர்ந்த பொதுஜன பெரமுனவினரும் போட்டியிட்டனர். இந்தக் கூட்டணியால் 6 ஆசனங்களை மட்டுமே வெல்ல முடிந்தது. இந்த நிலையில் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்த ரணிலோடு சேர்ந்த பொதுஜன பெரமுனவினரில் பலரும் நுகேகொடை பேரணியைத் தொடர்ந்து தமது தாய்க் கட்சியான பெரமுனவிற்கே திரும்புவது தொடர்பில் அந்தக் கட்சியினருடன் பேச்சு நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன கூறுகையில், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (பொஹோட்டுவ) 20க்கும் மேற்பட்ட முன்னாள் தலைவர்கள் அடுத்த ஜனவரி மாதம் மீண்டும் கட்சியில் இணைவார்கள் என்று தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் நிச்சயமாக இணைவேன் என்றும், தற்போது கட்சியில் மீண்டும் இணைவது குறித்து கட்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகிறார் எனவும் அபேகுணவர்தன தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய 20க்கும் மேற்பட்ட தலைவர்கள் தன்னுடன் இருக்கின்றனர் என்றும், இந்தக் குழு நாரஹேன்பிட்டியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றதாகவும் ரோஹித அபேகுணவர்தன கூறினார்.

முன்னாள் அமைச்சர்களான பவித்ரா வன்னியாராச்சி, ரமேஷ் பத்திரண, சிந்தக மாயாதுன்ன ஆகியோர் மீண்டும் பெரமுன கட்சியில் இணைய விரும்புகின்றனர் என்றும், அவர்களில் பலருடன், தானும் முன்னாள் அமைச்சரான ரமேஷ் பத்திரணவும் நுகேகொடை பேரணியில் பங்கேற்றிருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தாங்கள் யாரும் இலங்கை பொதுஜன பெரமுன கட்சியை விட்டு வெளியேற வில்லை என்றும், கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுவதற்காகச் சரியான முடிவை எடுத்து 'சிலிண்டர்' சின்னத்தின் கீழ் போட்டியிட்டனர் எனவும் அவர் கூறினார். அந்த பொதுத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் இருந்து பெரமுன கட்சியின் கீழ் போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகளைவிட 'சிலிண்டர்' சின்னத்தின் கீழ் போட்டியிட்ட குழு பெற்ற வாக்குகள் அதிகமானவை என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் அதன் மூலமே தாம் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கான வாய்ப்பு கிடைத்தது என்றும், அந்த நோக்கத்திற்காக 'சிலிண்டர்' சின்னத்தில் இணைந்தனரே தவிர கட்சியைவிட்டுச் செல்லவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆக மொத்தத்தில் நுகேகொடை பேரணி மக்கள் எழுச்சிக்கு அல்ல நாமலின் எழுச்சிக்கே அதாவது ராஜபக்சக்களின் மீள் எழுச்சிக்கே அடித்தளமாக அமைந்துள்ளமை மிகத் தெளிவு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியும் பேசினால் சந்தோசமாக இருக்கும்.

புதிய கல்வி மறுசீரமைப்பில் வரலாறு பாடத்தை தெரிவு பாடமாக அறிமுகப்படுத்துவதாக குறிப்பிடப்படுகிறது. இந்த நாட்டின் உண்மையான வரலாற்றை பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்று தயவுடன் வலியுறுத்துகிறேன்.

1000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மண்ணை தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்தார்கள், பிரித்தானியர்கள் இந்த நாட்டுக்கு அரசியலமைப்பை அறிமுகப்படுத்திய போது தமிழ் மக்கள் அதனை ஏற்கவில்லை என்ற வரலாறு, 1926 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த நாட்டில் சமஷ;டி அடிப்படையிலான தீர்வு என்று பண்டாரநாயக்க சொன்ன வரலாறு,

டொனமூர், சோல்பரி மற்றும் முதலாம், இரண்டாம் குடியரசு யாப்புக்கள் என்பவற்றுக்குத் தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்த வரலாறு, சுதந்திரத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் என்பவற்றை வரலாறுப் பாடத்துக்குள் உள்ளடக்குங்கள். அவ்வாறு உண்மையை வெளிப்படுத்தினால்தான் எதிர்கால தலைமுறையினராவது சமத்துவத்துடன் வாழ்வார்கள். இல்லையேல் தொல்பொருள் திணைக்களத்தால் எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் 100 ஆண்டுகளுக்கும் தொடரும்.

ஆளும்தரப்பின் கடந்த ஓரிரு வார செயற்பாடுகள் தமிழ் மக்களின் மனங்களை புன்படுத்தியுள்ளது. அரசியல் தீர்வுகள் ஊடாகவே இந்த வடுக்கள் ஆறும். வரலாறு பாடத்தில் தமிழர்களின் உண்மையான வரலாற்றை உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து ஒருசில ஊடகங்கள் அறிக்கையிடும் முறைமை கவலைக்குரியது. திருகோணமலை புத்தர் சிலை சம்பவத்தை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களம் முறையற்ற வகையில் செயற்படுகிறது. ஆளும்தரப்பின் அனுசரணையுடன் இவ்வாறு செயற்படுகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

தொல்பொருள் திணைக்களம் ஏதேனும் பகுதியில் பெயர்பலகைகளை அமைக்கும்போது குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதியை பெற வேண்டும். வாழைச்சேனை மற்றும் கொக்கட்டிச்சோலை பகுதியில் தொல்லியல் திணைக்களம் உள்ளூராட்சிமன்றத்தின் அனுமதியைப் பெறாமலேயே பெயர் பலகையை அமைத்துள்ளது. தொல்லியல் திணைக்களம் உள்ளூராட்சிமன்ற சட்டத்தை மீறியுள்ளது. நீதிமன்றத்தில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருசில ஊடகங்கள் போலியான விடயங்களை அறிக்கையிட்டு பிரச்சினைகளை தீவிரப்படுத்துகின்றன. தவறான விடயங்களை சமூகமயப்படுத்துகின்றன. இவ்வாறான தவறான செய்திகளினால்தான் இந்த நாடு இந்த நிலையை இன்று எதிர்கொண்டுள்ளது - என்றார்.

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி எனும் வலுவான ஆயுதத்தால் சமூகத்தை மாற்ற முடியும். ஆகவே கல்வித் துறை மேம்பாடு குறித்து ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முன்பிள்ளை கல்வி முறைமை தொடர்பில் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்த வேண்டும். ஒரு பிள்ளையின் கல்வி பராயத்தில் முன்பிள்ளை கல்வி மிகவும் முக்கியமானது. முன்பிள்ளை கல்வி ஆசிரியர்கள் தொடர்பில் ஆளும்தரப்பு புதிய கொள்கையை வகுக்க வேண்டும். புதிய கல்வி மறுசீரமைப்பில் முன்பிள்ளை கல்வி தொடர்பில் கொள்கைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தீவிரமாக காணப்படுகிறது . நகர்புற பாடசாலைகளுக்கும், கிராமப்புற பாடசாலைகளுக்கும் இடையிலான வளபகிர்வு மேடும்பள்ளமுமாக காணப்படுகிறது. கல்வியில் சமத்துவத்தை பேண வேண்டுமாயின் வளங்கள் சமமான முறையில் பகிரப்பட வேண்டும்.

பாடசாலைகளுக்கு இடையிலான வளப்பற்றாக்குறை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெற்றோர் தமது பிள்ளைகளை சிறந்த பாடசாலைகளுக்கு சேர்ப்பதற்கு கடவுளிடம நேர்த்திவைக்கிறார்கள். இந்நிலைமை மாற்றமடைய வேண்டும்.

அதேபோல் கிழக்கில் மஞ்சன்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரி ஒன்று உள்ளது. அங்கு விவசாயம் தொடர்பான பாடநெறி காணப்படுகிறது. இந்த கல்லூரியின் தர சான்றிதழை என்.வி.க்யூ 5 மற்றும் 6 என்ற நிலைக்கு தரமுயர்த்துமாறு தொழிற்கல்லூரி அமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

தெஹிவளை மீலாத் பாடசாலை பற்றி குறிப்பிட வேண்டும். பிலியந்தலை கல்வி வலயத்தில் உள்ள ஒரேயொரு தமிழ் பாடசாலையாக இந்த பாடசாலை காணப்படுகிறது.1952 ஆம் ஆண்டு இந்த பாடசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டிடமே இன்றளவில் காணப்படுகிறது. இந்த பாடசாலையை அபிவிருத்தி செய்ய உரிய கவனம் செலுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி, பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்த பாடசாலை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில் இருந்த 56 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் – என்றார்

## அமைச்சரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடப்படுகின்றது. இதற்கான தீர்வுகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் என்று சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.

வெருகல் பிரதேசத்தில் பெருமளவான காணிகளை வனவிலங்கு துறை உரிமை கோருவது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசனால் நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குகதாசன் முன்வைத்துள்ள விடயம் தொடர்பில் சிலவற்றைத் தெளிவுப்படுத்த வேண்டியுள்ளது. சரணாலய வலயம் எனும் பகுதியில் வனஉயிரிகள் திணைக்களத்தின் காணிகள் மட்டுமன்றி அதனுள் தனியார் காணிகள், அரச பல்வேறு திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகள், பல்வேறு வகையில் காணி உரிமைகள் உள்ள காணிகள் இருக்கலாம். இதனை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு வனஉயிரிகள் திணைக்களத்திற்கே உரியது. இதனால் அங்கு அபிவிருத்திகளை செய்யும்போது அந்தத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இந்நிலையில் வெருகல் பிரதேச செயலகப் பகுதியில் சேருவல அல்லே சரணாலயம் அவ்வாறே முன்னெடுக்கப்படும். அந்த பகுதி சாரணாலய பகுதியாக 1970ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குள் தனியார் இடங்கள், அரச காணிகள் உள்ளன. .இங்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட திணைக்களத்தில் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டும்.

போர் நடந்த பகுதிகளில் காணி பிரச்சினைகள் உள்ளன. அது இன்னும் தீர்க்கப்படவில்லை. போரின் பின்னர் குறித்த பிரதேசங்களில் வன பாதுகாப்பு மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமது பிரதேச எல்லைகளை அடையாளமிடும்போது அந்த பகுதிகளுக்கு சென்று அதனை செய்ய முடியாமையினால் ஜீ.பி.எஸ். மூலமே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது சில குறைபாடுகள் நடந்திருக்கலாம் என்று நம்புகின்றோம்.

அங்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அறிந்து, விடுவிக்கப்படக்கூடிய காணிகள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு 2025 ஒக்டோபர் 28 கூடியது. இதில் பல்வேறு திணைக்களங்கள் உள்ளடங்குவதுடன், மாவட்டச் செயலாளர்களும் உள்ளனர். இதன்போது இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது. இதற்கான தீர்வுகளை வழங்கும் செயற்பாட்டிலேயே நாங்கள் ஈடுபட்டுள்ளோம் –என்றார்.

## தலைவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவகப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டி சிலரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் சின்னாங்கள், இலட்சிணைகள் பயன்படுத்தாமல் உயிரிழந்தவர்களை நினைவுகூர முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் பொலிஸாரின் இத்தகைய கெடுபிடிகள் ஆட்சி மாறியும் காட்சி மாறவில்லையா என்ற கேள்வியை எழுப்புவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று மாலை மல்லாகம் சந்தி பகுதியில் மாவீரர் நினைவேந்தலுக்கான பாடல் ஒலிக்க விடப்பட்டுள்ளது. அவ்விடத்திற்கு வந்த தெல்லிப்பழை பொலிஸார் பாடல் ஒலிக்க விடப்பட்ட உபகரணங்களைக் கைப்பற்றி வழக்குச் சான்றுப் பொருளாக இலக்கமிட்டுள்ளனர்.

மாவீரர் நாள் நாளை வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் பொலிஸாரின் கெடுபிடிகள் இதுபோன்று தீவிரப்படுத்தப்படுமா என்ற அச்சம் இப்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

## வரவுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய காலத்தில் அமுல்படுத்தாத காரணத்தால் கல்வித்துறை இன்று பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. சகல பிரச்சினைகளுக்கும் மத்தியிலும், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள். இதனால் இலவச கல்வித் துறை முன்னேற்றமடைந்துள்ளது. ஆகவே அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி மறுசீரமைப்புக்கு இந்த ஆண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நான்கு கட்டமாக புதிய கல்வி மறுசீரமைப்பை

தொடர்ச்சி 6ம் பக்கம்...


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதிக்கான கோரிக்கை பயங்கரவாதமல்ல

தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கை–பயங்கரவாதக் குற்றச்சாட்டாக சித்தரிக்கும் பழக்கத்திலிருந்து விடுபடும் நேரம்

இலங்கை–கனடா உறவுகளைத் தொட்டுச்சென்ற சமீபத்திய கலந்துரையாடலில், அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத், கனடாவில் இடம்பெறும் சில செயல்பாடுகள் இலங்கையின் தேசிய ஒற்றுமைக்கு எதிரானவை என குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, விடுதலைப் புலிகள் [LTTE] சின்னங்கள் பயன்படுத்தப்படுவது அல்லது பிரிவினைவாத சிந்தனைகள் பரப்பப்படுவது தடுக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியதாக அவரது அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கனடா உயரானையர் இசபெல்லா காத்தரின், விடுதலைப் புலிகள் அமைப்பு கனடாவில் இன்னும் தடை செய்யப்பட்ட அமைப்பு என்றும், கூட்டாட்சி அரசு அந்த அமைப்பின் சின்னங்களையும் கருத்தியலையும் அங்கீகரிக்காது என்றும் தெரிவித்துள்ளார். இது ஒரு தூதரக நிலைப்பாடு மட்டுமல்ல; சர்வதேச சட்டத்தில் நிலவும் பொதுவான பாதுகாப்புக் கருத்தின் பிரதிபலிப்பும் ஆகும். ஆனால் இந்த உரையாடல்களில் நுட்பமான முரண்பாடு ஒன்று மீண்டும் வெளிப்படுகிறது.

தமிழர் அரசியல் கோரிக்கைகளுக்கும், புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையே அரசு தொடர்ந்து உருவாக்கும் செயற்கை இணைப்பு.

### அரசின் அணுகுமுறை

சர்வதேச அரங்கில் எப்போதும், தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் புலிகளின் கடந்தகால வன்முறையோடு இணைக்கப்பட்டு பேசப்படுகின்றன. இந்த நெறி உள்நாட்டிலும் ஆட்சியாளர்களின் பேசு பொருளாகவே தொடர்கிறது.

இதன் விளைவாக, தமிழ் மக்களின் பிரச்சினைகள் அரசு பார்வையில் அரசியல் உரிமைக் கோரிக்கைகளாக அல்ல, பாதுகாப்பு ஆபத்துகள் என கருதப்படுகின்றன. இது ஒரு ஆழமான தவறான புரிதல்.

தமிழர் சமூகத்தின் கோரிக்கைகள்-சம உரிமை, அரசியல் அதிகாரப் பகிர்வு, மொழி–கலாச்சார பாதுகாப்பு, காணாமல் போனவர்களுக்கான நீதிச் செயல்முறை, மற்றும் சுயமரியாதையுடன் வாழ்வதற்கான அரசியல் அமைப்பு ஆகியவை–ஒன்றும் வன்முறையின் கருத்தியலை ஆதரிப்பன அல்ல.

அரசு இந்த கோரிக்கைகளை விவாதிக்கவேண்டும் என்ற நிலைக்கு வரும்போது, நிழல் போல் புலிகள் என்ற பெயரை முன்வைக்கிறது.

இந்த அணுகுமுறையில் இருந்து வெளியே வராத வரை, இனப்பிரச்சினைக்கு நேர்மையான தீர்வு காண்பது சாத்தியமில்லை.

### விடுதலைப் புலிகள் வரலாற்றின் ஒரு பகுதி

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் நிறைவடைந்து பல ஆண்டுகள் ஆனாலும், அரசியல் உரையாடலில் அது இன்னும் ஒருவிதத் தடுப்பணையாக பயன்படுத்தப்படுகிறது.

### இதனால் உருவாகும் விளைவுகள் ஆழமானவை:

இதன் மூலம் அரசியல் தீர்வை நோக்கிய உரையாடல் சுருக்கப்படுகிறது. உரிமைகள் குறித்து பேசும் ஒவ்வொரு முயற்சியும் பாதுகாப்பு அச்சம் என இதனூடாக மதிப்பிறக்கம் செய்யப்படுகிறது. தமிழர் பிரச்சினைகளின் வரலாற்றுப் பின்னணி மறைக்கப்படுகிறது.

புலிகள் தோன்றக் காரணமான அரசியல் அநீதிகள், மொழி–கல்வி–நில உரிமைகள் குறித்த மோதல்கள் ஆகியவை அதிகாரபூர்வ பேச்சுக்களில் இடம்பெறாமல் விடப்படுவதற்கான கெடுநோக்கம் இதன் பின்னால் உள்ளது.

ஆளும்தரப்பின் இந்த அணுகுமுறையால் சர்வதேச சமூகம் கூட குழப்பமடைகிறது. புலம்பெயர் சமூகத்தின் செயல்பாடுகள் பற்றிய முறைப்பாடுகள் வந்தாலும், அதன் பின்னணியில் உள்ள அரசியல் கோரிக்கைகள் இலங்கைத் தரப்பால் விளக்கப்படுவதில்லை அதற்குப் பதிலாக, பயங்கரவாத்தை ஆதரிப்பதாக சர்வதுச சமூத்தின் மீதே குற்றஞ்சாட்டப்பார்க்கிறது ஆளும்தரப்பு.

தமிழர் சமூகத்துடன் உண்மையான சமரசத்திற்கு வர விரும்பும் எந்த அரசும் முதலில் இத்தகைய சித்திரிப்பை நிறுத்த வேண்டும்.

### காரணங்களைத் தீர்க்குக

புலிகள் சின்னங்கள் குறித்து இலங்கை அடிக்கடி கவலை வெளியிடுகிறது. ஆனால் ஒரு சாதாரண கேள்வி கேட்கப்படுவதில்லை,

இந்தச் சின்னங்களை உருவாக்கிய அரசியல் சூழல் தீர்க்கப்பட்டதா?

சர்வதேச அரங்கில் புலிகளின் சின்னங்களை தடுக்க ஆளும்தரப்பு முனைந்தாலும், உள்ளார்ந்த அரசியல் அநீதிகள் தீர்க்கப்படாத வரை,

இத்தகைய குறியீடுகள் மறைந்து போகும் வாய்ப்பு இல்லை.

தமிழர் பிரச்சினை என்பது சின்னங்களின் பிரச்சினையல்ல;

அது அநீதியின் தொடர்ச்சி பற்றிய பிரச்சினை.

### தேவையானது என்ன?

இன நீதி மற்றும் சமாதானமான அரசியல் சூழல் உருவாக வேண்டுமெனில், அரசு:

தமிழர் கோரிக்கைகளை 'பயங்கரவாதக் கண்ணாடி' வழியே பார்க்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்.

அரசியல் அதிகாரப் பகிர்வை நேர்மையாகப் பேசத் தொடங்க வேண்டும்.

காணாமல் போனவர்கள், போர் குற்றங்கள் போன்ற மனிதாபிமான பிரச்சினைகளில் வெளிப்படையான நடவடிக்கை எடுக்கவேண்டும். சர்வதேச நீதியை நோக்கி நகரவேண்டும்.

சர்வதேச சமூகம் முன்வைக்கும் விமர்சனங்களை எதிர்ப்பரப்பில் தெளிவுபடுத்தாது, உள்நாட்டு மாற்றத்திற்கான வாய்ப்பாகப் பார்க்க வேண்டும்.

### இது ஒரு நீதிக் கோரிக்கை

தமிழர் அரசியல் பிரச்சினை ஒரு பாதுகாப்பு பிரச்சினை இல்லை;

அது ஒரு நீதி மற்றும் சமத்துவத்தின் பிரச்சினை.

அரசியல் கோரிக்கைகளை பயங்கரவாதத்தினால் மூடிக்காட்டும் நடைமுறை தொடரும் வரை, இலங்கை ஒருபோதும் உண்மையான தேசிய ஒற்றுமையை அடையாது.

நாட்டின் எதிர்காலம் சமாதானமாக இருக்க வேண்டுமெனில்,

தமிழர் கோரிக்கைகளை அரசியல் நியாயமாக ஏற்றுக்கொள்வதில்தான் அதில் முதல் படி தொடங்குகிறது.

## லண்டன் ஆர்ப்பாட்டம் பற்றி விமல் வீரவன்ச விமர்சனம்

ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவுக்கு லண்டனில் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு திட்டமிட்டதாக இருக்கலாம். அல்லது அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்னர் புலம்பெயர் இலங்கைத் தமிழர்களிடமிருந்து நிதியைப் பெற்றபோது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமையால் ஏற்பட்ட அதிருப்தியின் வெளிப்பாடாகக்கூட இருக்கலாம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவாளர்கள் ஜே.வி.பி.யை எதிர்ப்பதாலேயே லண்டனில் டில்வின் சில்வாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகச் சிலர் கூறலாம். ஆனால் உண்மையில் அங்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு கொள்கை ரீதியிலானதல்ல. அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்னர் நிதியைப் பெற்றுக் கொண்டபோது வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில்கூட இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம்.

தொல்பொருள் இடங்களில் பெயர் பலகைகள் அகற்றப்பட்டதையும் மாவீரர் நினைவு தினத்தை விரும்பியவாறு அணுக சுதந்திரமாக இடமளித்தை மறைப்பதற்காகவும் புலம்பெயர் இலங்கை தமிழர்கள் எமக்கும் எதிரானவர்கள் என்று காண்பிப்பதற்காகவும்கூட இந்த ஆர்ப்பாட்டம் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் - என்றார்.

## ஏ.எல். விஞ்ஞான வினாத்தாளில் மோசடி எதும் இடம்பெற்றுள்ளதா?

### சமார சம்பத் எம்.பி. சபையில் கேள்வி

கல்வி உயர்தரப் பரீட்சையின் பொருளியல் விஞ்ஞான வினாத்தாளின் பகுதி ஒன்றில் 50 கேள்விகளில் 27 வினாக்களும் பகுதி இரண்டில் 10 வினாக்களில் 5 வினாக்களும் நுகேகொடை தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் மேலதிக வகுப்பில் விநியோகிக்கப்பட்ட வினா பத்திரத்தில் இருந்துள்ளது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெற்று முடிந்த உயர்தரப் பரீட்சையின் பொருளியல் விஞ்ஞான வினா பத்திரம் இன்று நாட்டில் பேசுபொருளாக அமைந்துள்ளது. நுகேகொடை சாக்கியா தனியார் கல்வி நிறுவனம் மாணவர்களுக்கு வினா பத்திரத்திரம் ஒன்றைக் கையளித்திருக்கிறது. உயர் தரப் பரீட்சையில் பகுதி 1, வினா பத்திரத்தில் 50 கேள்விகள் இருக்கின்றன. அதில் 27 கேள்விகள் குறித்த தனியார் கல்வி நிறுவனம் மாணவர்களுக்கு வழங்கியிருந்த வினா பத்திரத்தில் இருந்த வினாக்களுக்குச் சமமானதாகும்.

அதேபோன்று பகுதி 2இல், 10 வினாக்களில் 5 வினாக்கள் குறித்த தனியார் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த வினாத்தாளில் இருந்த வினாக்களுக்கு மிகவும் சமமாகவே இருக்கிறது. பகுதி 2இல் 5 வினாக்களுக்கே விடை எழுத்தவேண்டி இருக்கிறது. சிலவேளை குறித்த 5 வினாக்களும் தனியார் கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வினாக்களாக இருந்தால், அது பரீட்சையின் பெறுபேற்றில் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்துவதுடன் ஏனைய மாணவர்களுக்கும் அநீதி ஏற்படுகிறது.

அதனால் பரீட்சை திணைக்களத்தின் பொருளியல் விஞ்ஞான வினாத்தாளையும் நுகேகொடை சாக்கியா கல்வி நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டிருக்கும் வினாத்தாள்களையும் நான் சபைக்குச் சமர்ப்பிக்கிறேன். இந்த இரண்டு வினாத்தாள்களையும் ஒப்பிட்டுப்பார்த்து, இது சரியா, பிழையா எனத் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் மாணவர்களுக்கு அநீதி ஏற்படும். அதற்கு இடமளிக்கக்கூடாது.

அதேநேரம் கல்விக்கு அதிகம் நிதி ஒதுக்கியதாக பிரதமர் தெரிவிக்கிறார். ஆனால் ஆரம்பமாக கல்விக்கு அதிகம் நிதியை ஒதுக்கியிருந்த சாதனையை முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவே வைத்திருந்தார். அதன் பின்னர் கல்வி அமைச்சராக இருந்த அகிலவிராஜ் காரியவசம் அதனை மேற்கொண்டிருந்தார். அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் மொனராகலை, பதுளை மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலைகளை விரைவாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தார்.

மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 16ஆயிரம் பேரை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டிருக்கிறது. அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய, அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் காலத்தில் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அவர்கள் கடந்த 3 மாதங்களாக வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.

பட்டதாரிகளுக்கு தொழில் கிடைக்காவிட்டால், அவர்களை வீதிக்கிறக்கி போராடப் பழக்கியது நீங்கள்தான். அந்த பழக்கத்திலே தற்போது இவர்கள் போராடி வருகின்றனர். பழக்காமல் இருந்தால் இது பிரச்சினையாகி இருக்காது. அதனால் இவர்கனளின் பிரச்சினைக்கும் விரைவாக தீர்வொான்றை வழங்க வேணடும்.

ஆளும்தரப்பு கல்வி மறுசீரமைப்பு செய்யப்போவதாக தெரிவித்திருக்கிறது. ஆனால் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையை கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவனமும் இணைந்தே மேற்கொண்டிருக்கிறது. இந்த வேலைத்திட்டத்துக்கு கல்வி நிபுணர்கள், புத்திஜீவிகள் இணைத்துக்கொள்ளப்படவில்லை. அதனால் இந்த கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை அறிவித்து, எதிர்வரும் 12ஆம் திகதி பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்திருக்கிறது. அதனால் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையை ஆளும் எதிர்க்கட்சி, பத்திஜீவிகள், நிபுணர்கள் என அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொண்டு இதனை மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் பதில் அதிபர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றன. ஒருசில பாடசாலைகளில் 20 வருடங்களாக சிலர் பதில் அதிபர்களாக இருக்கின்றனர். குறிப்பாக தமிழ் மொழி மூலமான பாடசாலைகளிலே அதிகமான பதில் அதிபர்கள் கடமையாற்றி வருகிறார்கள். அதனால் அவர்களை அதிபர் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று சில அதிபர் சேவையில் இருப்பவர்களின் சம்பளத்தைவிட ஆசிரியர் சேவையில் இருப்பவர்களின் சம்பளம் அதிகம். அதனால் இந்த சம்பள முரண்பாடு தொடர்பாகவும் ஆராய்ந்து ஒரு முறையான ஒரு சம்பள முறையை ஏற்படுத்தி. சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# நேற்றும் நாடாளுமன்றத்தில் சஜித்தால் வெடித்த சர்ச்சை

தான் பொய் கூறுவதாக தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் சபையில் முன்வைக்கப்பட்ட சிறப்புரிமை பிரச்சினை தொடர்பில் சபையில் நேற்று செவ்வாய்க்கிழமை சர்ச்சை ஏற்பட்டது.

பொலிஸ் சான்றிதழைப் பெறும்போது பொது மக்கள் பாதுகாப்புக் குழு அல்லது சிவில் பாதுகாப்புக் குழுவின் கட்டாயப் பரிந்துரை வழங்கப்பட வேண்டும் என்று கூறப்படுவது தொடர்பில் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஆற்றிய உரை பொய் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

அவர் பொய்யில் அரசியல் செய்ய முயற்சிக்கின்றார் என்றும் பிமல் கூறியிருந்த நிலையில், அது தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து கருத்துக்களை தெரிவிக்கம்போது, சபையில் இருந்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, எழுந்து, சிறப்புரிமையை முன்வைக்க ஒழுங்கு விதிகள் இருக்கின்றன. அதன் பிரகாரம் செயற்படுமாறு வழிநடத்தவேண்டும் எனச் சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகரை நோக்கி தெரிவித்தபோதே சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து கூறுகையில், நிலையியற் கட்டளை 91ஏ உறுப்பினரொருவர் மற்றொரு உறுப்பினருக்கெதிராகத் தகாத நோக்கத்தில் குற்றம் சாட்டுதலோ அல்லது மற்றொரு உறுப்பினரின் தனிப்பட்ட விடயங்கள் பற்றிக் குறிப்பிடுதலோ ஆகாது என குறிப்பிடுகிறது. இதன் பிரகாரம், தான் தொடர்பாக சபையில் நடத்தப்பட்ட விவாதங்களின் அடிப்படையில் எனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன.

நான் விடயங்களை முன்வைக்கும்போது, நான் பொய் சொல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டேன், என்றாலும், நான் உண்மையையே முன்வைத்தேன். நான் பொய் கூறவில்லை. பொலிஸ் சான்றிதழைப் பெறும்போது பொது மக்கள் பாதுகாப்புக் குழு அல்லது சிவில் பாதுகாப்புக் குழுவின் கட்டாயப் பரிந்துரை வழங்கப்பட வேண்டும் என்பது பொய்யல்ல இது தொடர்பாக ஹக்மன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரண்டு கடிதங்கள் காணப்படுகின்றன. இந்த கடிதங்களை 280 பி படபத்த எனும் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவர் யசந்த ஆரியசேன என்பவராலயே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடிதங்கள் அனைத்தையும் ஹன்சாடில் பதிவிடுகிறேன். இதன் மூலம் யார் உண்மையைச் சொல்கிறார்கள் என்பது வெளிப்படும் மாத்தறை பொலிஸ் நிலையத்தின் அறிவித்தல் பலகையில் கூட இதுபோன்ற ஒரு அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலின் பிரகாரம், பொலிஸ் அறிக்கையைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்களில் சிவில் பாதுகாப்பு குழுவின் கடிதம் தேவை என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டதை தொடர்ந்து இன்று(நேற்று) காலை குறித்த அறிவித்தல் பலகையில் அந்தப் பகுதி மட்டும் நீக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த உண்மைச்சம்பவங்களை அறிக்கையிட்ட, பேசிய செய்தியாளர்கள்களை இன்று குற்றப் புலனாய்வுத் துறைக்கு அழைத்திருப்பது தவறான நடவடிக்கையாகும்.

அத்துடன் இங்கே எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இது தொடர்பில் கூறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். எனது வாயை மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்றார்.

இவ்வேளையில் சபை முதல்வர் கருத்து தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமை மீறப்பட்டால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முறைமையொன்று உள்ளது. அதன்படி நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன் என்று சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகரிடம் தெரிவித்தார்.

இதன்பின்னர் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் கருத்து தெரிவிக்க முயன்றபோது, மீண்டும் எழுந்த சபை முதல்வர், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பலாம். ஆனால் சிறப்புரிமை பிரச்சினையை இவ்வாறு எழுப்ப முடியாது. பிரதிசபாநாயகர் நீங்கள் நிலையியல் கட்டளைப்படி செயற்படுங்கள் – என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி, சபை முதல்வர் ஒழுங்குவிதிகளை சரியாகப் படிக்கவேண்டும். அவரால் சபைக்கு தலைமை தாங்குபவருக்கு இவ்வாறு சவால் விடுக்க முடியாது என்றார்.

இவ்வேளையில் எழுந்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகரை நோக்கி ‘அவர் பொய்காரர் இல்லையென்று நாட்டுக்கே கூறவேண்டும். பெரிதாக சத்தமிடும் போது நிலையியல் கட்டளையை மீறுவதற்கு நீங்கள் இடமளித்தால் அந்த வாய்ப்பை மற்றைய உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும். இவ்வாறு பேச இடமளிப்பது தவறாகும். உங்களின் நேர்மைத்தன்மையை பயன்படுத்தி சபையை நடத்திச் செல்வதற்கு இடையூறுகளை ஏற்படுத்த இடமளிக்க வேண்டாம். சட்டப்படி செயற்படுவதற்காகவே நீங்கள் பிரதி சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். சத்தம் போட்டு கதைப்பதால் நீங்கள் பயப்படவேண்டாம். சபை முதல்வர் என்ற ரீதியில் இதனை கதைப்பதற்கு எனக்கு உரிமை உள்ளது. சத்தத்திற்காக நிலையியல் கட்டளைகளை மீறுவதற்கு இடமளிக்கவேண்டாம்’ என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## வரவுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா விக்கிரமராராச்சி பல்கலைக்கழகம் பற்றி எதிர்க்கட்சியினர் கேள்வியெழுப்பியிருந்தார்கள். இந்தப் பல்கலைக்கழகத்தில் நிலவும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையை சபைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

கல்வித்துறைக்கு நிதி ஒதுக்கல் பற்றி கேள்வியெழுப்பப்படுகிறது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கு மாத்திரம் 7.04 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களை காட்டிலும் பெரியளவிலான ஒதுக்கீடாகும். ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வருடத்திலேயே கல்விக்கு 6 சதவீதம் நிதி ஒதுக்குவதாக நாங்கள் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. அதேபோல் புதிய கல்வி மறுசீரமைப்புக்காகமாத்திரம்3000மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் பல சவால்கள் காணப்படுகிறது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். சிறந்த மாற்றத்துக்குள் பிரவேசிக்கும்போது சவால்கள் தோற்றம் பெறும். புதிய கல்வி மறுசீரமைப்பை 2026ஆம்ஆண்டுமுதல்அமுல்படுத்தும்போது தொழில்நுட்ப ரீதியில் சவால்கள் தோற்றம் பெறும்.அவற்றைச் சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கு கல்வித்துறையைத் தயார்படுத்தவேண்டும்.

சிறந்த திட்டமிடமிடலுடன் புதிய கல்வி மறுசீரமைப்பு அமுல்படுத்தப்படுகிறது. இது பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்தை அடி ப்படையாகக் கொண்டது. ஆகவே தோற்றம் பெறும் சவால்களுக்கு தீர்வு காண அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

## கடலையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற திருகோணமலை - வெருகல் பிரதேசத்தில் வனஉயிரிகள் மற்றும் வனவளத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை வெருகல் பிரதேசத்தில் வனஉயிரிகள்திணைக்களத்தின்நிலஅபகரிப்பு நிலைமைகள்தொடர்பில்உறுப்பினர்குகதாசன் முன்மொழிந்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையினை வரவேற்கின்றேன்.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் 10 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பின் அளவு 32041.66 ஏக்கராகும். இந்தப் பிரதேசத்தில் 4809 குடும்பங்களைச்சேர்ந்த 16,156 மக்கள் வாழ்கின்றனர்.

இவற்றில் 1970.10.09 அன்றைய எல்லை அபய பூமி வர்த்தமானி மற்றும் 424/24ஆம் ஆலக்க1986.10.24திரிகோணமடுவர்த்தமானி மூலமும் வனஉயிரிகள் திணைக்களத்தினர் 25242.13 ஏக்கர் காணிகளைத் தமது காணிகளென உரிமை கோருகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலைகள், வணக்க இடங்கள், கிராம அலுவலர் அலுவலகம், வைத்தியசாலை, தபால் நிலையம் விளையாட்டுமைதானங்கள்என அனைத்துக் உட்கட்டமைப்பு வாய்ப்புக்களுடன் கூடிய இந்த வெருகல் பிரதேசத்தைத்தான் இந்த இரண்டு திணைக்களங்களும் அபகரித்து வைத்திருக்கின்றனர்.

வனவளத் திணைக்களமோ 13,906 காணிகளை உரிமை கோருவதாக அறிகின்றேன். அந்த வகையில் இரு பகுதியினரதும் மொத்த அபகரிப்பானது 39,148 ஏக்கர்,ஆனால் வெருகல் பிரதேசத்தின் மொத்தப் பரப்போ 32041.66 ஏக்கராகும். இவ்வாறிருக்க 7,106 ஏக்கர் அப்பகுதியில் இல்லாத காணிகளுக்கும் அபகரிப்பாளர்கள் உரிமை உரிமை கோருகின்றனர்.

இவ்வாறுதான் கூகுள்வரைபடத்தினூடாக காணி அபகரிக்கும் திணைக்களத்தினரது செயற்பாடுகள் காணப்படுகின்றன. இது உங்களுக்குபிழையாக,அல்லதுகேவலமாகத் தெரியவில்லையா? இவ்வாறானவர்கள் தகுதி வாய்ந்த அதிகாரிகள்தானா? இந்தச் செயற்பாடுகள் தங்களுடைய ஆட்சியில் புதிதாக இடம்பெறுகின்ற விடயமில்லை. கடந்த ஆட்சிகளின் தொடர் செயற்பாடுகளே இவை. இருப்பினும் இவ்வாறான செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டவேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம். இதே அபகரிப்பு நிலைமைகள் வன்னியிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் சரணாலயம், நந்திக்கடல் இயற்கைக் காப்பகம், நாயாறு இயற்கைக் காப்பகம், கொக்கிளாய் சரணாலயம் என்ற அடையாளங்களுடன் பெருமளவிலான நில ஆக்கிரமிப்பை வனஉயிரிகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கரியல்வயல், சுண்டிக்குளம் பகுதியிலுள்ள தமிழர்களது பூர்வீக விவசாய நிலங்கள் சுண்டிக்குளம் தேசிய பூங்காவாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 131 விவசாயிகளுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அண்மையில் மன்னார் சிலாவத்துறை கடற்பரப்பையும்வனஉயிரிகள்திணைக்களம் கடல்சார் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திற்கென கோரியிருக்கின்றது. எனவே தயவுசெய்து சுற்றாடல் அமைச்சர் இந்த விடயங்களை நீங்கள் கவனத்திற்கொள்ளவேண்டும். இவ்வாறானஅபகரிப்புக்களுக்குத்துணையாகச் செயற்படமாட்டீர்களென நம்புகின்றோம். வடக்கு மற்றும் கிழக்குப் மாகாணங்களில் இவ்வாறாக இந்த திணைக்களங்களினூடாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை இந்த ஆளும்தரப்புவிடுவிப்பதற்குநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள் கின்றோம் -என்றார்.

## புதிய சட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

மாகாணசபைத் தேர்தலுக்காக பழைய சட்டமும்காணப்படுகிறது. புதியசட்டமொன்றும் காணப்படுகிறது. குறித்த புதிய சட்டம் நாடாளுமன்றத்திலும்நிறைவேற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த கால கட்டத்திலேயே இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள இந்த சட்டத்துக்கமைய செயற்பட நடவடிக்கை எடுத்தாலும், அதற்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படவில்லை.எனவே சட்டம் நடைமுறையிலிருந்தாலும்எல்லைநிர்ணயம் மேற்கொள்ளப்படாதமையால், தேர்தலை நடத்த முடியாது.

எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப் படாவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதும் குறித்த சட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை. எனவே இந்த காரணிகளை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது. இது நாடாளுமன்றத்தால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

விருப்பு வாக்கு முறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு மக்கள்மத்தியில்எதிர்ப்புகாணப்படுகிறது. தமது தொகுதியைப்பிரதிநிதித்துவப்படுத்தும்ஒருவரே தமக்கானபிரதிநிதியாகவரவேண்டும்என்பதே மக்களின்விருப்பமாகும். அதற்கமையவேபுதிய சட்டம்தயாரிக்கப்பட்டுநிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் அதற்கமைய எல்லை நிர்ணய நடவடிக்கைகள் இடம்பெறாமையால், புதிய சட்ட உருவாக்கத்துக்கான வாய்ப்புக்கள் நாடாளுமன்றத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்த நடவடிக்கைகள் நிறைவடைந்தால் கூடிய விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும். மாகாணசபைகள் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல உள்ளன. மாகாண சபைகளுக்காக 2026 வரவு-செலவுதிட்டத்தில் 76 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு 532 பில்லியன் ரூபா புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகள் இருக்கும் பட்சத்தில் இந்த நிதி ஒதுக்கீடுகளின் ஊடாக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மாகாணசபைத்தேர்தலைதுரிதமாகநடத்த வேண்டும் என்பதே ஆளும்தரப்பினதும் நோக்கமாகும். எவ்வாறிருப்பினும் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அப்பால் சென்று அதனை நடத்த முடியாது. நாடாளுமன்றத்தால் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே தேர்தலை நடத்த முடியும். மாறாக எவராவது ஒருவர் வந்து தேர்தலை பழைய முறைமையில் நடத்துமாறு கோரினால், அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப தேர்தலை நடத்த முடியாது - என்றார்.

## கல்விக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எதிர்காலம் சிறுவர்கள் கையில். ஆகவே அவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கவேண்டும். 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்கு 6 சதவீத மானியம் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டோம். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது. கல்வித்துறைக்கான ஒதுக்கீடு கட்டம் கட்டமாக அதிகரிக்கப்படும்.

கல்விச் சேவையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் கல்வி நிர்வாக சேவைக்கு இந்த ஆண்டு 502 பேர் இணைத்துக் கொண்டார்கள். அதேபோல் ஆசிரியர் கல்வி சேவைக்கு 580 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆசிரியர்கல்லூரியில்இருந்துவெளியேறிய 4,131 பேர் இந்த ஆண்டு ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளார்கள். அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தல் இந்த மாதம் வெளியிடப்பட்டது. ஆகவே அதிபர் சேவையில் நிலவும் வெற்றிடப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இவர்களின் போராட்டம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தனக்குத் தெரியாத விடயங்களை சபையில் குறிப்பிடுகிறார். இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் 2023.01.27 அன்று வெளியிடப்பட்டு, விண்ணப்பம் கோரப்பட்டது. 2023.03.25 அன்று போட்டிப்பரீட்சை நடைபெறவிருந்த நிலையில், அதற்கு முன்னர் இந்த வர்த்தமானிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 4 மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டன.

நாங்களா உயர் நீதிமன்றத்துக்குச் சென்றோம்? எதிர்க்கட்சியின் தொழிற்சங்கத்தினர்கள்தான் நீதிமன்றம் சென்றார்கள். இந்த மனுக்கல் தற்போது நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

பட்டதாரிகளை இரண்டுக்கு இரண்டு என்ற முறைமையின் பிரகாரம் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளுமாறு எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிடுகிறார். முதலில் இவருக்கு 1994 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு பற்றி யாராவது சொல்லிக் கொடுங்கள். பாவம் தெரியாத விடயங்களை குறிப்பிட்டு நெருக்கடிக்குள்ளாகுகிறார்.

சுபோதினி அறிக்கை பற்றித் தெரியாத விடயங்களைக் குறிப்பிடுகிறார். ஆசிரியர் - அதிபர்சம்பளபிரச்சினைக்குத்தீர்வுகாண்பதற்கு விசேடகவனம்செலுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் - அதிபர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சிப்பெற்றுக்கொண்டு தான் அனைத்து விடயங்களையும் கோரிக்கைகளையும்செயற்படுத்தசெயற்படுத்த வேண்டும் - என்றார்.

## ஏற்றுமதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தஒக்டோபரில்1474மில்லியன்டொலர் ஏற்றுமதிவருமானமாகக்கிடைத்துள்ளது. இதில் வர்த்தகப் பொருள் ஏற்றுமதி வருமானம் 1158 மில்லியன் டொலராகும். சேவைத்துறையின் ஏற்றுமதி வருமானம் 316 மில்லியன் டொலராகும். ஒட்டுமொத்தஏற்றுமதிவருமானம் மாதமொன்றுக்கு சராசரியாக 1400 மில்லியன் டொலரைவிட அதிகமாகப் பதிவாகியுள்ளது. சர்வதேச சந்தைகளிலுள்ள போட்டித் தன்மையில் நாம் வெற்றி பெற்றுள்ளமையே இதற்கான பிரதான காரணியாகும்.

அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா, ஜேர்மன், இதாலி, பெல்ஜியம், ஹொங்கொங் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளன. பிராந்திய அடிப்படையில் அவதானிக்கும்போது அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் உள்ளிட்டவற்றுக்கான ஏற்றுமதிகளும் அதிகரித்துள்ளன. இதனை மேலும்அதிகரிப்பதற்காகஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்கான வேலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2036இல் 36 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமான இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த இலக்கை அடைவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். வருட இறுதியில்அதுகுறித்தஅறிக்கையைவெளியிட எதிர்பார்த்துள்ளோம். இவ்வாண்டுக்கான எமது ஏற்றுமதி வருமான இலக்கு 18 பில்லியன் டொலர்களாகும். அந்த வகையில் இதுவரையில் ஏற்றுமதி வருமானம் 14,400 மில்லியன் டொலர்களைக் கடந்துள்ளது.

எமது இலக்கில் 80 சதவீதத்தை அண்மித்துள்ளோம். எதிர்வரும் மாதங்களில் எமது இலக்கை வெற்றி கொள்வதற்கான பயணத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். 2026இல் இதனை விடச்சிறந்த ஏற்றுமதி வருமான வளர்ச்சியை எட்ட முடியும் என்று நம்புகின்றோம். ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காக இவ்வாண்டிறுதியில் வரிச் சலுகைகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் ஏற்றுமதித்துறையில் பெருந்தோட்டத்துறை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. தேயிலை, இறப்பர், தேங்காய் என்பவற்றால் பெரும் ஏற்றுமதி வருமானம் கிடைக்கின்றது. குறிப்பாகத் தேயிலை ஏற்றுமதி வருமானம் 1300 - 1450 மில்லியன் டொலராகக் காணப்படுகிறது. இறப்பர் ஏற்றுமதி வருமானம் 900 - 950 மில்லியன் டொலருக்கு குறைவான மட்டத்திலேயே காணப்படுகிறது. தெங்கு உற்பத்திகள் ஊடாக கடந்த 10 மாதங்களில் மாத்திரம் ஏற்றுமதி வருமானம் 43 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் 1 பில்லியன் டொலரைக் கடந்துள்ளது.

இறப்பர் உற்பத்தியில் 33 சதவீத ஏற்றுமதி அமெரிக்க சந்தைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். எனினும் இவ்வாண்டு 20 சதவீத தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளதால் ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்கள் ஆளும்தரப்பிடம் சலுகைகளைக் கோரியிருக்கின்றனர். அது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவற்றை மேம்படுத்துவதற்கு சர்வதேசத்துடனான வர்த்தக உடன்படிக்கைகள் அத்தியாவசியமானவையாகும். அதற்காக தற்போது விசேட அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பெருந்தோட்ட மாணவர்களுக்கான பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. எச்சரிக்கை

50 மாணவர்களுக்கு குறைவாக காணப்படும் பாடசாலைகளை மூடிவிடுவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்குமாக இருந்தால், தோட்டங்களில் இருக்கும் மாணவர்கள் பாடசாலை கல்வியை விட்டு, தேயிலை பறிக்க செல்லும் நிலை ஏற்படும். அதனால் தோட்டங்களில் பாடசாலைகளை மூடுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இலவசக் கல்வி அறிமுகப்பட்டு 30 வருடங்களுக்கு பின்னரே தோட்டங்களில் இலவச கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. வெள்ளையர்கள் தோட்டங்களில் பாடசாலைகளை ஏற்படுத்த தவறியதாலே இந்தநிலை ஏற்பட்டுள்ளது. அதனால் தோட்டப்பாடாலைகளுக்கு விசேட கவனம் செலுத்தி, நாட்டின் ஏனைய பாடசாலைகளின் தரத்துக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் மொத்தமாக 10ஆயிரத்தி 76 பாடசாலைகள் இருக்கின்றன. அதில் 9730 மாகாண பாடசாலைகள், 396 தேசியபாடசாலைகள் இருப்பதுடன் 864 தோட்ட பாடசாலைகள் இருக்கின்றன. இந்த 864 தோட்ட பாடசாலைகளில் நூறுக்கும் குறைவான பாடசாலைகளிலே உயர்கல்வி கற்பிக்கப்படும் பாடசாலைகள் இருக்கின்றன. அதனால் உயர்கல்வி பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலமே ஆசிரியர்கள் உருவாக்கிக்கொள்ள முடியுமாகும். மலையக பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்துவருவதன் காரணமாகவே ஆசிரியர் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதனால் தொடர்ந்தும் மலையக பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க, உதவி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்டப்பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞான பிரிவுகளை ஆரம்பிக்க எமது காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், அதற்கு தேவையான பட்டதாரி ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. வடக்கில் இருந்து ஆசிரியர்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தபோதும் அது சாத்தியமாகவில்லை. அப்போதுதான் இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை கொண்டுவரப்போவதாக தெரிவித்து, பெரிய சர்ச்சை ஏற்பட்டது, இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை கொண்டுவருமாறு நாங்கள் தெரிவிக்கவில்லை.எவ்வாறாவது இந்த ஆசிரியர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால், இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சியளிக்க வேண்டும். இல்லாவிட்டால், எதிர்வரும் காலங்களில் இன்னும் பிரச்சினையாக இடமிருக்கிறது.

மேலும் பெருந்தோட்டங்களில் 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளை மூடுவதற்கு ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.தோட்டங்களில் 7, 8 கிலோ மீட்டருக்கு ஒரு பாடசாலையே இருக்கிறது. அதனை மூடிவிட்டால், மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமல், தேயிலை பறிக்கவே செல்வார்கள். அதனால் தோட்டங்களில் இருக்கும் குறைந்த மாணவர்கள் இருக்கும் பாடசாலைகளை மூடிவிட ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அதேபோன்று மாணவர்களின் இடை விலகலை பாரக்கும்போதும் தோட்ட பிரதேசங்கள் இருக்கும் மாவட்டங்களிலே அதிகமான மாணவர்களின் இடை விலகல் பதிவாகி இருக்கிறது. தோட்டப்புற பெற்றொர்களுக்கு கல்விக்கு செலவிட போதுமான பொருளாதார வசதி இல்லாமையே இதற்கு காரணமாகும் என்றார்.

# தொல்பொருள் திணைக்கள பலகைகளுக்கு சேதம் விளைவித்தோர் மீது நடவடிக்கை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

வாழைச்சேணையில் தொல்பொருள் திணைக்களத்தின் அடையாளப்படுத்தல் பெயர் பலகைகள் அகற்றப்பட்ட சம்பவம் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாகவே கருதப்படும். இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் எவ்வித பாகுபாடும் இன்றி சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு இடம்பெற்றபோது, இது குறித்து செய்தியாளர்கள்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோரளைப்பற்று மற்றும் வெள்ளாவெளி பிரதேசசபைகளின் சில உறுப்பினர்களால் தொல்பொருள் திணைக்களத்தின் அடையாளப்படுத்தல் பெயர் பலகைகள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. வாழைச்சேணை, வாகரை, வெள்ளாவெளி, கரடியனாறு மற்றும் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையங்களில் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியால் இதுகுறித்து முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் தொடர்பில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை மற்றும் செங்கலடி நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கோரளைப்பற்று பிரதேசசபையின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நான்கு பெயர் பலகைகள் தற்போது பொலிஸ் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் பிரதேசசபைத் தலைவர் ஒருவர் உள்ளடங்களாக 6 சந்தேகநபர்கள் தொடர்பில் 4 பொலிஸ் குழுக்களால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் எந்த பிரதேசத்தில் தொல்பொருள் ஸ்தானங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றாலும் அவற்றுடன் தொடர்புடையவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான செயற்பாடுகள் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாகவே கருதப்படும்.

எந்த சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்வது என்பது பொலிஸாரால் தீர்மானிக்கப்படும். எந்த வகையிலும் இது போன்ற செயற்பாடுகளுக்கு தளர்வுகள் வழங்கப்பட மாட்டாது. இவை மீண்டுமொரு இடம்பெறக் கூடாத செயற்பாடுகளாகும் என்றார்.

# வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர்களுக்குப் பிணை

தொல்பொருள் இடங்களுக்குரிய பெயர்ப் பலகையினை அகற்றியது தொடர்பானவழக்கில்வாழைச்சேனை பிரதேசசபை தவிசாளர், பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட 5 பேருக்கும் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

2025 நவம்பர் 22 வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுகளில் தொல்பொருள் திணைக்களத்தினால் தொல்பொருள் இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களுக்குப் பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன.

வாழைச்சேனை பிரதேசசபைக்கு உட்பட்ட வீதிகளில் தங்களது அனுமதி பெறப்படாமல் குறித்த பெயர்ப்பலகைகள் இடப்பட்டதாகத் தெரிவித்துவாழைச்சேணைபிரதேசசபை தவிசாளினால்அப்பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டன.

இதுகுறித்துதொல்பொருள்திணைக் களத்தினால் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப் பட்டிருந்தநிலையிலும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வழங்கிய உத்தரவுக்கு அமைவாகவும் விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வந்தனர்.

அதற்கமைய வாழைச்சேனை பிரதேச சபைக்குள் இருந்த தொல்பொருள் இடங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகளை நேற்று முன்தினம் கைப்பற்றிய வாழைச்சேனை பொலிஸார், இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைக் கைதுசெய்தனர்.

அதேவேளை இதனுடன் தொடர்புபட்ட வாழைச்சேனை பிரதேசசபையின் தவிசாளர் சுதாகரன், பிரதி தவிசாளர், இரண்டு உறுப்பினர்கள் உட்பட நால்வர் நேற்றைய தினம் வாழைச்சேணைநீதிவான்நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

இந்நிலையில் அவர்கள் சார்பில் நேற்றைய தினம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரான சுமந்திரன், தனது தரப்பினர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் பொருத்துமற்றவை என நீதிமன்றத்திற்குக் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அத்தோடு 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின்கீழ் வீதிகள் தொடர்பான அதிகாரங்கள் பிரதேசசபைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், அந்த சட்டத்தின் பிரகாரம் பிரதேசசபை தவிசாளர் அதிகாரமுடையவர் எனவும் சுட்டிக்காட்டினார். எனவே அந்த அதிகாரத்துக்கு அமைவாகச் செய்யப்பட்ட விடயத்தை ‘பெயர்ப்பலகைகளை அகற்றினார்‘ என்று குற்றச்சாட்டாக முன்வைக்கமுடியாதுஎனவும்சுமந்திரன் வாதத்தை முன்வைத்தார்.

அத்துடன் உள்ளூராட்சிமன்றங்களின் அனுமதியைப்பெற்றே பெயர்ப்பலகை இடப்படவேண்டும் என்பதை சுமந்திரன் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது, அதனை தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் ஏற்றுக்கொண்டதுடன் எதிர்காலத்தில் முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். அவ்வாறு முறையாக அனுமதி கோரும்போது அதனைச் சபையில் சமர்ப்பித்து சபையினால் முறையான அனுமதியை வழங்கமுடியும் என்று சுமந்திரன் கூறியதன் அடிப்படையில் வழக்கு சுமுகமாக தீர்க்கப்படலாம் என்ற காரணத்தினாலும், பொலிஸார் முன்வைத்த குற்றச்சாட்டுகள் பிணைவழங்ககூடிய காரணங்களைக் கொண்டிருப்பதனாலும் நீதிவானால் ஐந்து பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதற்கமைய வாழைச்சேனை பிரதேசசபையின் தவிசாளர், பிரதி தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள் இருவர் உள்ளடங்கலாக ஐந்து பேரும் தலா ஐந்து இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்தது. இந்த வழக்கு மீண்டும் டிசம்பர் 15 அழைக்கப்படவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# பெண்களை வர்ணிக்கும் அமைச்சர்களை உடனே கட்சியிலிருந்து நிக்கவேண்டும்

## சாமர சம்பத் எம்.பி. கொந்தளிப்பு

பெண்களை வர்ணிக்கும் அமைச்சர்களைவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.
உடனடியாக கட்சியில் இருந்து நீக்குமாறு அரசுத் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தலைவர் அநுரகுமாரவிடம் வலியுறுத்துமாறு புதிய பெண்களை அழகானவர்கள் உள்ளிட்ட சொற்களைக்
ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டு வர்ணிக்கும் அமைச்சர்களை வைத்துக் கொண்டு
சாமர சம்பத் தசநாயக்க ஆளும்தரப்பிடம் எவ்வாறு கல்வியை முறையாக முன்னெடுக்க முடியும்? எனவே
கோரிக்கை விடுத்தார். பெண்களை வர்ணிக்கும் அமைச்சர்களை உடனடியாக கட்சியில்
நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இருந்து நீக்குமாறு அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் அரசின்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி எம்.பி.க்கள் வலியுறுத்த வேண்டும். எமது கட்சியில் இவ்வாறு
அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை யாரேனும் நடந்து கொண்டால், அவர்களை உடனே பதவியில்
இருந்து நீக்குவோம் .

தற்போதுமாணவர்களுக்குகல்விகற்பிப்பதைவிடுத்துஎம்.பி.க்கள், அமைச்சர்களுக்கு கல்விகற்பிக்கப்படவேண்டும். நாடாளுமன்றத்தில் நடப்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருப்பதால், ஆங்கிலத்தில் பேச முடியாதவர்கள் ஒதுங்கி இருப்பது நல்லது. இல்லையேல், ஆங்கிலத்தை கற்றுக்கொண்டு வந்து உரையாற்றவேண்டும் .

இது குறித்து, அரசுத் தலைவர்யும் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# தெஹிவளை மீலாத் பாடசாலையில் இடப் பற்றாக்குறை – ரிஷாத் எம்.பி.

தெஹிவளையில் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு இருக்கும் ஒரே பாடசாலையான மீளாத் பாடசாலை இடபற்றாக்குறைக்குதீர்வுகாணவலயக்கல்விபணிமனையால் இனம் காணப்பட்டிருக்கும் காணியை பெற்றுக்கொடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி தெஹிவளை மீளாத் பாடசாலை விவகாரத்தில் முழுமையாக ஈடுபட்டு வருவதுடன் அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து நிதி ஒதுக்கியமைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

குறித்த பாடசாலை 73 வருட பழைமைவாய்ந்த இந்த பாடசாலை 23பேர்ச் காணியில் அமைந்துள்ளது. அங்கிருக்கும் கட்டிடம் ஒரு தனிநபரினால் கட்டிக்கொடுக்கப்பட்டதாகும். அந்த பாடசாலையில் தற்போது 500 மாணவர்கள் வரை கல்வி கற்று வருகிறார்கள். அதில் 120 மாணவர்கள் கல்வி கற்பதற்கு இடமில்லாமல் பாடசாலையின் வெளிச்சூழலில் கல்வி கற்று வருகிறார்கள். இன்னும் 240 மாணவர்கள் அந்த பாடசாலைக்கு விண்ணப்பித்து, எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

அந்த பாடசாலைககு அருகில் இருந்த சுமங்கல பாடசாலை, மூடப்பட்டு கைவிடப்பட்டிருந்த நிலையில், வலயக்கல்வி பணிமனையால், அந்த பாடசாலையை புதுப்பித்து எடுத்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்குள்ள மக்கள் சுமார் 30 இலட்சம் ரூபா செலவிட்டு, அந்த பாடசாலையை புதுப்பித்து, அங்கு கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்க முற்பட்டபோது,, இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை பிரச்சினைகளை உருவாக்கிய ஒரு மதகுரு அந்த பகுதியில் இருக்கிறார். அவரின் தலைமையில் ஒரு குழு அங்கு சென்று, திருத்தப்பட்ட பாடசாலை கட்டிடத்துக்குள் நுளைய முடியாதவாறு தடைகளை ஏற்படுத்தி இருந்தது.

பின்னர் அந்த பாடசாலைக்கு அந்த பிரதேசத்தில், 6 இடங்கள் வலயக்கல்வி பணிமனையால் காட்டப்பட்டு, தற்போது 4 இடங்கள் இனம் காணப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு இடத்தையாவது வழங்க நடவடிக்கை எடுக்கமாக இருந்தால், எமது வியாபாரிகளின் உதவியுடன் அங்கு கட்டிடங்களை கட்டி அந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கு உதவி செய்ய முடியுமாகி இருக்கும். பிலிந்தலை கல்வி வலயத்தில் இருக்கும் தமிழ் மொழி மூலமான ஒரே பாடசாலை இதுவாகும். அங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகம் வாழ்ந்துவருகின்றனர். கடந்த 19ஆம் திகதி வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது என்றாலும் அந்த கூட்டத்தில் அந்தி பிரதேச ஆளும் கட்சி நாடாளுமன்றஉறுப்பினராக சமன்மலி, அதில் கலந்துகொள்ள தவறியதால், அதில் எந்த தீர்மானமும் எடுக்கப்படாமல் போயுள்ளது. அதனால் தெரிவு செய்யப்பட்ட 4 காணிகளில் ஒரு காணியை வழங்கி, அந்த பாடசாலை மாணவர்கள் நிம்மதியாக கல்வி கற்பதற்கு உதவி செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கல்விக்கு 6 சதவீதம் என்றவர்கள் அரைவாசிகூட ஒத்துக்கவில்லை

## ஆளும்தரப்பைச் சாடிய ரவிகரன் எம்.பி.

ஒருகாலத்தில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 6 சதவீத ஒதுக்கீட்டை கல்விக்கு வழங்குமாறு போராடிய பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணியால் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அதன் அரைவாசியைக்கூட கல்விக்கு ஒதுக்கவில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 வரவு செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் தனிச்சிறப்பை அடைதல் எனும் இலக்கில் 2026 இற்கான கல்வி நகர்கிறது. உலகளாவிய நியமங்களுக்கு ஒத்திசைந்து இலங்கையின் பொதுக்கல்வி நிலைமாற்றத்துக்கான புதிய கல்வி மறுசீரமைப்பும் மாணவர்களுக்குரிய கூடுதல் திறன்வாய்ப்புகளை அளிக்க முயல்கிறது. 2026 ஆண்டிலிருந்து அமுல்படுத்தவுள்ள கல்வி மறுசீரமைப்பு முயற்சிகளை நாம் வரவேற்கிறோம்.

மாணவர்களுக்கான காகிதாதிகள் கொடுப்பனவு, மாற்றுத்திறன் மாணவர்களுக்கான உதவு தொகை, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவு தொகை, கஸ்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு, அதிபர்களுக்கான நிர்வாகக் கொடுப்பனவில் அதிகரிப்பு உள்ளிட்ட முயற்சிகளும் வரவேற்புக்குரியன.

சிறந்ததோர் எதிர்காலத்தை கட்டமைப்பதற்கு நிகழ்காலத்தின் மாணவர்கள் சிறந்த அறிவு, திறன், மனப்பாங்கு உடையவர்களாக இருக்க வேண்டும். மாணவர்களின் அடித்தளம் முன்பள்ளிக்கல்வியில் இருந்து தொடரவேண்டும்.

முறையாக மேற்பார்வை செய்யப்படாத அத்திவாரத்தோடு பலமாடிக் கட்டடங்களை கட்டுவதற்கு ஒப்பான ஒரு கலைத்திட்ட நடைமுறையே இங்குள்ளது. எந்தக்கட்டடம்எப்போதுவிழும்எனத்தெரியாதிருப்பதற்கு ஒப்பான ஒரு கலைத்திட்ட நடைமுறை இது.

தரம் - 01 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் இலவசக் கல்வி நடைமுறை முன்பள்ளிகளில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. முன்பள்ளிகளின் தரத்தை உறுதிப்படுத்தல், முன்பள்ளிகளிடையே நிலவும் வளச் சமச்சீரற்றநிலையைஇழிவளவாக்கல்என்பவற்றுக்கான எட்டக்கூடிய தீர்வுகளை 2026 இற்கான வரவு செலவுத் திட்டம் காட்டவில்லை.

2027 ஆம் ஆண்டு முதல் முன்பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளபொதுக்கலைத்திட்டத்தை முன்னிட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், முன்பள்ளிகளுக்கான வள ஒதுக்கீடுகள் என்பவை தொடர்பிலும் தெளிவான நிலைப்பாட்டை அரசின் 2026 வரவு செலவுத் திட்டம் காட்டவில்லை. பொதுக்கல்வி வலுவூட்டலிலும் தாங்கள் முன்வைக்கும் தரம், சமத்துவம் மற்றும் தனிச்சிறப்பை அடைதல் என்பவை வன்னியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு 2026இலும் சவாலாகுமா என்றே வினவுகிறோம்.

பொதுக்கல்வி நிலைமாற்றத்துக்கான புதிய கல்வி மறுசீரமைப்பில் ஒரு கணினியேனும் இல்லாத ஒரு பாடசாலைக்கு, ஒரு திறன் வகுப்பறையேனும் இல்லாத இடைநிலைப் பாடசாலைக்கு, இணையவசதி அற்ற ஒரு பாடசாலைக்கு, விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் மிகவும் நடைமுறைச்சாத்தியம் அற்றிருக்கிற இடைநிலைப் பாடசாலைக்கு 2026 இல் நீங்கள் சொல்லும் பதில் என்ன? வாய்ப்புப்பார்த்தலா,

வன்னியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் தீவின் கல்விச் சமத்துவத்தில், தீவின் கல்வித் தரத்தில் தீவிலே தனிச்சிறப்பை அடைவதற்கான வாய்ப்பைப் பெறுவதில் மிகுந்த சவால்களை எதிர்நோக்குகின்றன. வடமாகாணத்தில் 300இற்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறைஆரம்பக்கல்வியில்மட்டும்காணப்படுகிறது. அரசின் கலைத்திட்ட நடைமுறையில் முன்பள்ளிக்கல்வி மீதான முறையானமேற்பார்வைஇல்லை. இந்நிலையில் ஆரம்பக் கல்விக்கு பாடசாலைக்குள் நுழைகின்ற மாணவர்களுக்கு அங்கும் போதுமான ஆசிரியர் இல்லாதிருப்பதால் மாணவர்கள் பத்துவயதிற்குள் பெறவேண்டிய எண், எழுத்தறிவுத்திறன் மிகவும் கேள்விக்கு உள்ளாகிறது.

கொரோனா இடர்காலத்தில் கற்றல் தடங்கல் தொடர்பில் 3ஆம் வகுப்பு மாணவர்களின் எண், எழுத்து தொடர்பாக கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வடமாகாணத்தில் 16 சதவீத மாணவர்களும் கிழக்கு மாகாணத்தில் 25 சதவீத மாணவர்களும் மட்டுமே வயதுக்கேற்ற வாசிப்புத் திறனைக் கொண்டிருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பெறுபேற்றின் முடிவுகளின் அடிப்படையில் இரண்டு பகுதிகளிலும் 35 இலும் கூடிய புள்ளியை எடுத்த மாணவர்களின் சதவீதத்தில் தேசிய அளவிலான 70.43 சதவீதத்திலும் குறைவான சதவீதத்தையே வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களும் பெற்றுள்ளன. மேற்படி அடைவுநிலை, ஒப்பீட்டளவில் வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆரம்பக்கல்வியில் மாணவர்களின் எண், எழுத்துத் திறனை மேம்படுத்தவேண்டிய தேவையைச் சுட்டிக்காட்டுக்கிறது.

வவுனியா தெற்கில் 10 பாடசாலைகள், மன்னாரில் 5 பாடசாலைகள், வவுனியா வடக்கு மற்றும் முல்லைத்தீவு கல்வி வலயங்களில் தலா 2 பாடசாலைகளில் முழுமைப்படுத்தபடாத கட்டடங்கள் வகுப்பறைத் தேவைகளோடு காணப்படுகின்றன. மன்னார் கல்வி வலயத்தில் மட்டும் இணைய வசதி அற்று 45 பாடசாலைகள், ஒரு மேசைக்கணினிகூட இல்லாது 26 பாடசாலைகள், 72 பழுதடைந்த மடிக் கணினிகள், 126 பழுதடைந்த வரைபட்டிகைகள், 22 பழுதடைந்த திறன் தளங்கள், 539 பழுதடைந்த மேசைக் கணினிகள், 13 பழுதடைந்த திறன் தொலைக்காட்சிகள் என மொத்தம் 772 கணினிச் சாதனங்கள் பயன்படுத்த முடியாது காணப்படுகின்றன.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மட்டும் மேற்படி வகையில் 522 மேசைக் கணினிகள் அடங்கலாக மொத்தம் 870 இலத்திரனியல் சாதனங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன. வவுனியா தெற்கு வலயத்தில் மேற்படி வகையில் 318 மேசைக் கணினிகள் அடங்கலாக மொத்தம் 488 இலத்திரனியல் சாதனங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு ஏனைய மூன்று கல்வி வலயங்களிலும் காலங்கடந்த, பழுதடைந்த, பதிவழிக்கப்படவேண்டிய கணினிகள் ஏராளமாக காணப்படுவதோடு கலைத்திட்ட நடைமுறைக்கான இலத்திரனியல் சாதனத்தேவையும் மிகுதியாக உள்ளது. ஆரம்பப் பாடசாலைகளில் நிர்வாகத் தேவைகளை ஆற்றுவதற்கேனும் ஒரு கணினியையேனும் ஒவ்வொரு பாடசாலையும் கொண்டிருப்பதை 2026 வரவு செலவுத் திட்டம் உள்ளடக்கியுள்ளதா?

பொதுக்கல்வி நவீனமயப்படுத்தல் திட்டம் உள்ளிட்ட சில திட்டங்கள் ஊடாகத் தெரிந்தெடுக்கப்பட்ட சில பாடசாலைகளுக்கு மட்டும் ஒவ்வொரு கணினி வீதம் வழங்கி எப்போது பாடசாலைகளில் கல்வி நிலைமாற்றத்தை ஏற்படுத்தப்போகிறீர்கள்? 100 மாணவர்களுக்கு ஒரு மலசலகூடம் என்ற விதிமுறையில் பாடசாலைகளுக்குரிய மலசலகூடங்களை மட்டுப்படுத்துகின்றீர்கள். 100 முதல் 200 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு எவ்வாறு இது பொருந்தும் என எண்ணிப்பாருங்கள்.

15 நிமிட இடைவேளையில் ஒன்றன் பின் ஒன்றாக எத்தனை மாணவர்கள் சிறுநீர் கழிக்கமுடியும்? அதன் பின்னரும் கை கால் கழுவி எத்தனை பேரால் அந்த 15 நிமிட இடைவேளையில் சாப்பிடவும் முடியும்? போதியளவு நீர் குடிக்காது சிறுநீரைக் கட்டுப்படுத்தி பிள்ளைக்கு உடல் உபாதைகளைத்தான் இந்த முறைமை தோற்றுவிக்கிறது.

பாடசாலைகளில் போதியளவு மலசலகூடங்களின் நிர்மாணத்திற்கும் அதேபோல மலசல கூடங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பிற்கும் போதுமான நிதி ஒதுக்கீடு கடந்த காலங்களில் கிடைக்கப்பெறவில்லை. 2025 இலும் கிடைக்கப்பெறவில்லை. 60 பாடசாலைகளில் திருத்தத் தேவை உள்ள கல்வி வலயம் ஒன்றுக்கு 20 பாடசாலைக்கே திருத்த நிதி ஒதுக்கப்படுகிறது.

திருத்தம் மற்றும் பராமரிப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளால் மலசலகூடங்கள் உள்ளிட்ட பல பௌதிக வளங்கள் பாவனைக்கு உதவாத நிலைக்கு பாடசாலைக்குள் மாறுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட பௌதிக வளம், மட்டுப்படுத்தப்பட்ட மனித வளம், 2026 இல் நடைமுறைக்கு வரவுள்ள கல்வி மறுசீரமைப்பை வன்னிக்கு எட்டாக்கனியாக்குமா? அது மட்டுமல்ல தற்போதுள்ள கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவே போதியளவு தொழினுட்ப வசதிகள் இன்றி, விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இன்றி மற்றொரு ஆண்டு - 2026 இலும் இலக்கு வைத்துள்ள கல்வியில் தரம், கல்வியில் சமத்துவம், கல்வியில் தனிச்சிறப்பை அடைதல் என்பவற்றை வன்னிக்கு எட்டாக்கனியாக்கவுள்ளதா?

ஒருகாலத்தில் கல்விக்கு மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்விக்கு ஒதுக்க வேண்டும் என போராடிய ஒருவரே இன்று கல்வி அமைச்சராக இருக்கும்போதும் அதன் பாதியைக்கூட கல்விக்காக ஒதுக்க இயலவில்லை. ‘சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்’ என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன் –என்றார்.

# ஏ.எல். பொருளியல் வினாத்தாளும் கசிவா?

## விசாரணை கோருகிறார் சானக எம்.பி.

உயரத் தரப் பரீட்சையில் பொருளியல் பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே கசிந்துள்ளதாக தற்போது குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆளும்தரப்பு இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இதனை அலட்சியப்படுத்தக்கூடாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சானக மாதுகொட தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்துக்கு பின்னரான காலத்தில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் இலவச கல்விக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளன. கடந்த அரசாங்கங்கள் ஏதும் செய்யவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது. இன்று அமைச்சு பதவி வகிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இலவச கல்வியால் தான் தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள்.

ஆளும்தரப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்வி துறை தொடர்பில் பல விடயங்களை குறிப்பிட்டது. ஆட்சிக்கு வந்தவுடன் ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதாக குறிப்பிட்டது.ஆனால் ஒருவருடம் நிறைவடைந்துள்ள நிலையிலும் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுக் கிடைக்கவில்லை.

முன்பிள்ளை கல்வி முறைமை தொடர்பில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இதுவரையிலும் அந்த திட்டங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முன்பிள்ளை கல்வி முறைமை பற்றி எழுப்பும் கேள்விகளுக்கு ஆளும்தரப்பிடம் பதிலில்லை.

பொருளியல் பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே கசிந்துள்ளதாக தற்போது குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆளும்தரப்பு இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இதனை அலட்சியப்படுத்தக்கூடாது.

கல்வி துறை குறித்து 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டன.இருப்பினும் ஏதும் செயற்படுத்தப்படவில்லை. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் பல விடயங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அவை சிறந்த முறையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன் - என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2025இல் வெளியிடப்பெற்றது